**சீதாவகபுற நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 09 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சீதாவகபுற நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையான ரூபா 58,213,296 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதிக்குரிய சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியம் - செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகை ரூபா 63,216,846 ஆகும். இந்த தொகைக்குரிய விளக்கமளித்தல் பின்வருமாறு இருந்தது.<br><br>ரூபா<br>பேருந்து நிலைய நிலுவை வட்டி ரூபா 58,213,296<br>2018 திசெம்பர் வட்டி 642,550<br>மழை நீர் வடிகாண் முறைமை நிலுவை வட்டி, 4,272,493<br>2018.12.31 இல் உள்ளவாறு நிலுவை வட்டி 88,507 |
| (ii) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மழை நீர் வடிகாணுக்காக பெறப்பட்ட கடன் | சரியான வகைப்படுத்தலின் கீழ் காண்பிக்கப்பட | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| தொகையான ரூபா 4,272,494 நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | |

## (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கண்காகய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியக் கணக்கின் மீதிக்கும் உபயோகப் பதிவேடுகள் / சுற்றறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 62,485,567 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த தொகை கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கடன் வட்டி ஒன்று சேர்க்கப்பட்டிருந்ததுடன் அது எங்களின் பதிவுகளின் பிரகாரம் ரூபா 62,485,789.94 ஆக இருக்க வேண்டும்.<br>பேரூந்து நிலைய நிர்மாணம் — ரூபா 58,213,296.64<br>மழை நீர் வடிகாண் முறைமை நிலுவை வட்டி — 4,272,493.30<br>--------------------<br>62,485,789.94<br>======== |

## (இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | விடயம் | பெறுமதி | | |
| | | ரூபா | | |
| (அ) | முற்பணம் | 801,258 | கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மீதி 2007 ஆம் ஆண்டிற்கு முன்னைய வருடங்கள் முதல் கணக்குகளில் காணப்படுகின்ற மீதியாகும். 1989 ஆம் ஆண்டில் ரூபா 200,000 தொகை உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்ததுடன் அந்த முற்பணக் கணக்கு தீர்க்கப்படாமல் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பிரகாரம் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | தனியார் பஸ் நிலைய கட்டணம் | 230,700 | கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு | வருடாந்தம் சிட்டையிடப்படாத தொகை 1998 ஆம் ஆண்டின் போது ரூபா 230,700 ஆக சிட்டையிடப்பட்டிருந்தது. இந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணம் அறவிட முடியாத மீதிகளை இனங்கண்டு பதிவழிப்பதற்காக பிரதம அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | விருந்தினர் விடுதி வாடகை | 195,089 | கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது பழைய நிலுவை மீதியாக இருந்ததுடன் புத்தகங்களில் இருந்து கண்டறிவதற்கு முடியாதிருந்தமையால் எதிர்காலத்தில் இந்த மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | சுந்தைக் கடை வாடகை | 1,211,621 | கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையான ரூபா 1,211,621 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சுபைக்குச் சொந்தமான 26 காணி கட்டிடங்களுக்காக உரித்தை உறுதிப்படுத்துகின்ற உரித்துறுதி சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்பதிகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சபையின் ஆதனங்களுக்குரிய சட்ட ரீதியான உரித்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக ''சபை ஆதனங்களை இனங்காணல் மற்றும் சட்ட ரீதிக்கும் குழு'' நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த குழுவின் மூலம் பெறப்பட்ட அறிக்கையின் பிரகாரம் உரித்துறுதி இல்லாத ஆதனங்களுக்காக உரித்துறுதியை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன ான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி.371(5) | 07 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 801,258 தொகையான முற்பண மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 1989 ஆம் ஆண்டில் 06 ஆம் இலக்க உறுதிச்சீட்டு மற்றும் 1989.01.06 ஆம் திகதிய உறுதிச் சீட்டில் ரூபா 200,000 உள்ளுராட்சித் திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்ததுடன் அந்த தொகை முற்பணக் கணக்கில் தீர்க்கப்படாமல் 3:8:81 இன் கீழ் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் தீர்க்கப்படாத முற்பணத்தொகை ரூபா 801,258 ஆகும். |
| (ஆ) | மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2016 யூலை 11 ஆம் திகதி LGD/08/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | உள்ளுராட்சி நிறுவனங்களின் கீழ் உரித்தான காணி மற்றும் ஆதனங்களை பௌதீக ரீதியில் இனங்காணல் நில அளவையாளர் மூலம் அளத்தல் தொடர்பாக 2017 ஒக்தோபர் 04 ஆம் திகதி 05 ஊழியர்களையுடைய குழுவொன்று நியமிக்கப்பட்ட போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிரு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சபைக்குரிய ஆதனங்கள் பௌதீகரீதியில் இனங்காணப்பட வேண்டும் | 2019.03.15 ஆம் திகதி சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு நகர சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | க்கவில்லை. | | |
| (இ) | 1993 நவம்பர் 18 ஆம் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக பேணப்பட்டிருந்த வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 3,061,037 தொகையான பணம் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளுக் காகவும் முதலீடு செய்யப்பட்டிருக்க வில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் பேணிச்செல்லப்படுகின்ற வங்கிக் கணக்கில் உள்ள பணம் கூட்டுப்பசளைத் தளத்தில் லீவார்ட் தாங்கி நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்வதற்கு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,280,897 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,263,911 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 21,469,000 | 21,492,302 | 15,144,489 | 6,347,813 | 21,095,000 | 21,063,558 | 20,671,264 | 6,441,094 |
| (ii) | வாடகை | 36,892,300 | 35,739,572 | 31,179,463 | 4,560,109 | 29,328,800 | 30,764,376 | 31,165,161 | 17,229,580 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,351,500 | 943,819 | 905,419 | 38,400 | 1,443,500 | 845,394 | 845,394 | 89,710 |
| (iv) | ஏனைய வருமானம் | 30,801,500 | 35,862,324 | 18,146,402 | 17,715,922 | 30,907,200 | 20,701,300 | 30,418,236 | 1,864,955 |
| | மொத்தம் | 90,514,300 | 94,038,017 | 65,375,773 | 28,662,244 | 82,774,500 | 73,374,628 | 83,100,055 | 25,625,339 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

#### ஆதன வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 6,283,342 ஆக இருந்ததுடன் இந்த மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 555,932 ஆக இருந்த போதிலும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதி ரூபா 1,849,359 ஆகவும் காணப்பட்டதுடன் இந்த நிலுவை இதுவரையிலும் அறவிட்டிருக்கப்பட்டில்லை. | சபைக்கு அறவிடவேண்டிய ஆதன வரி தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான நிலுவைகளை நடமாடும் சேவைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்வதன் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

(அ) வியாபார நிலைய வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வியாபார நிலைய வாடகை ரூபா 3,245,470 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வாடகை வருமானம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகையில் இது வரையில் ரூபா 2,033,850 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 10 வருடங்களுக்கு மேற்பட்ட வாடகை நிலுவை ரூபா 85,320 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | பெற வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் மேலதிக வருமானத்தை உழைப்பதற்கு உபவிதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்படாமல் 2018 ஆம் ஆண்டின் போது 06 வருமான வழிகளில் ரூபா 8,570,676 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | நகர சபை கட்டளைச்சட்டத் தின் 153 ஆம் பிரிவு தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட உப விதியின் கீழ் 14 உப விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையில் இது வரையிலும் உப விதிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான உப விதிகளை இனங்கண்டு வரைவு ஒன்றினை தயாரித்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகர மண்டபத்துக்காக இது வரையிலும் உப விதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உப விதிகளை தயாரித்து வருமான வழிகள் தொடர்பில் கவனம் வெலுத்தப்படும். |

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 மார்ச் 21 ஆம் திகதிய 18/0309/744/009 ஆம் இலக்க முறையீட்டு சபையின் தீர்மானத்தின் படி கழிவுப் பொருள் தளமொன்றை ஸ்தாபிப்பதற்காக புஸ்ஸெல்லாவ பெருந்தொட்ட கம்பனிக்குரிய தோட்டத்தின் 05 ஏக்கர் நிலப் பகுதியை கைப்பற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து கழிவு மலையில் உள்ள ஆபத்தினை குறைப்பதற்கு சபையினால் இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாமதமின்றி தேவையான வழிகளை எடுக்க வேண்டும். | புதிய கழிவுகள் போடுவதற்காக புஸ்ஸெல்லாவ கம்பனியினால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் அளவை நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அந்த திட்டத்தை தயாரித்து பூர்த்தி செய்வதற்கு அதன் மதிப்பீட்டினை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கும் சுற்றாடல் சிபாரிசினைப் பெற்றுக் கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. |

(இ) சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வெவேகலே சுற்றாடல் சுற்றுலா நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | | |
| பிரதேச மக்களின் நிலைபேறான அபிவிருத்தி பிரவேசமாக வழங்குவதற்காக 27 ஏக்கர் அளவிலான காணி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வெவேகலே சுற்றாடல் அபிவிருத்தி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,503,193 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதிலும் அது அமுல்படுத்தப்படவில்லை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாமதமின்றி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி மானிய செயற்திட்டத்தின் கீழ் சீதாவக்க வெவேகலே சுற்றாடல் சுற்றுலா நிலையத்தில் உல்லாச பிரயாணிகளுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பெயரில் ரூபா 2,000,000 தொகை ஒன்று சபைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்காக தேவையான திட்டங்களை தயாரித்து |

| | | |
|---|---|---|
| | | கொள்வதற்கு வடிவமைப்பு தொழிநுட்பவியலாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அமுல்படுத்தப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் போதும் 2019 ஆம் ஆண்டின் போதும் உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களுக்காக பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டமையால் 2018 ஆம் ஆண்டிற்குரிய திட்டங்கள் தயாரிக்க முடியாதிருந்ததுடன் 2019 முதல் 2023 வரை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| சபையின் பதவி நிலை உத்தியோகதத்தர்கள் இரண்டு பேரும், இரண்டாம் நிலைத் தொகுதியில் ஐந்து உத்தியோகத்தர்களும், ஆரம்ப நிலையில் 11 உத்தியோகத்தர்களிலும் காணப்பட்ட வெற்றிடங்கள் இது வரையிலும் நிரப்பப்படவில்லை. | தாமதமின்றி ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதவி நிலை பதவிகள் மற்றும் இரண்டாம் நிலைப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி உள்ளூராட்சி ஆணையாளர் (மேல் மாகாணம்) இற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப பதவிகளில் 1 வெற்றிடம் காணப்பட்டதுடன் அதில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அங்கீகாரம் பெறப்பட்டதுடன் அந்த வெற்றிடங்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக |

| | | |
|---|---|---|
| | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வேலைக்கள தொழிலாளர் பதவி ஒன்றின் வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 141,347 தொகையான ஊழியர் கடன் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை ஊழியர் கடன் மீதி உரிய கடன்காரரிடமிருந்தும் பிணையாளரிடமிருந்தும் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | 20 வருடங்கள் அளவிலான காலத்துக்கு முன் இருந்து ரூபா 141,341 தொகையான கடன் நிதி ஒன்று அறவிடமுடியாதுள்ள ஊழியர் கடனாக காணப்பட்டது. இந்த கடனாளிகள் சேவையை விட்டுச் சென்றமை, மரணமடைந்தமை, சேவையிலிருந்து நீக்கியமை, இடம் மாற்றலாகிச் சென்றமை போன்ற விடயங்களின் காரணமாக கடனை அறவிடமுடியாதிருந்தமை பழைய பதிவேடுகளை பரீட்சித்த போது உறுதிபடுத்தப்பட்டது. அந்த பதிவேடுகளில் காணப்படுகின்ற முகவரிகளுக்கு கடனை அறவிடுவதற்காக கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அந்தக் கடிதங்களில் அதிகமான கடிதங்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உத்தியோகபூர்வ இல்லம் | | |
| (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தில் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் 4.3 மற்றும் 2 ஆம் தரங்களுக்குரிய வீடுகளின் சராசரி வாடகைக் காலம் 05 வருடங்களாக இருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 07 | தாபன விரிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான உத்தியோகப்பூர்வ இல்லங்களில் குடியிருந்து வருகின்ற ஊழியர்களின் உடன்படிக்கைக் காலம் 2018.04.30 ஆம் திகதியில் முடிவடைந்துள்ளது. எனினும் அவர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களை விட்டு விலகாதிருந்ததுடன் இது தொடர்பாக 2018.06.06 ஆம் |

| | | |
|---|---|---|
| | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்து வரும் ஊழியர்கள் 24 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக அவற்றில் குடியிருந்து வருகின்றனர். | திகதி நிதி மற்றும் கொள்கைகள் தயாரித்தல் செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு 06 மாத காலங்களுக்காக உடன்படிக்கை செய்யுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் உடன்படிக்கையில் கைசாத்திட்டிருக்கவில்லை. |
| (ii) | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்து வருகின்ற உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் வீடமைப்புத் தொகுதியில் அனுமதியற்ற நிர்மாணங்களை செய்திருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் சென்றிருந்தமை பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட போதிலும் சபையினால் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ இல்லங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனுமதியற்ற நிர்மாணங்களை உடனடியாக உடைத்து அகற்றுமாறும் உத்தியோகபூர்வ இல்லங்களில் உள்ள வளவுகளில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரங்களை உடனடியாக நிறுத்துமாறும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | உடன்படிக்கை காலம் காலவதியாகியதன் அடிப்படையில் 2018 யூலை மாதம் முதல் 2019 சனவரி வரையிலும் மாதாந்த வாடகை அறவிடப்படாது இருந்ததுடன் அதன் பிரகாரம் சபைக்கு ரூபா 137,382 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்டவர்களிடம் இருந்து 2018 யூலை மாதம் முதல் 2019 சனவரி மாதம் வரையான நிலுவை வாடகை அவர்களின் கோரிக்கையின் படி தவணையாக அறவிடப்படுகின்றது. |
| (iv) | உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த ஊழியர்கள் / உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களின் உரித்தினை மீள சபைக்கு கையேற்பதற்கு அதிகாரத்தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. |

(ஆ) அனுமதியற்ற நிர்மாணம்

| | | |
|---|---|---|
| (i) சபையின் அங்கீகாரமின்றியும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடாமலும் அவிசாவல நகரத்தில் பொதுச் சந்தை கட்டிட தொகுதியில் அனுமதியற்று நிர்மாணிக்கப்பட்ட 24 கடைகள் காணப்பட்டன. | தாமதமின்றி பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையின் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்படட அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) பல வருட காலங்களுக்கு முன்னர் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைத் தொகுதியின் திட்டத்தின் பிரகாரம் கொங்கிரீட் தட்டு ஒன்றில் கடை நிர்மாணித்து வருமானத்தை உழைப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக இல்லாதிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தட்டுக்களில் ஒன்று சரிந்து இருந்தமை பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அவிசாவெல பேரூந்து நிலையத்தின் காணியில் வணிக கட்டிடத் தொகுதி மற்றும் அருகில் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு இணையாக சந்தைத் தொகுதியின் கொங்கிரீட் தட்டு புதிய திட்டத்தில் உறுதியாக இருக்கும் பிரகாரம் கடைகளில் திருத்தங்களை மேற்கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு பழைய திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. புதிய திட்டத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) புவக்பிட்டிய கடைத் தொகுதி | | |
| புவக்பிட்டிய நகரத்தில் பொதுச் சந்தைக்கட்டிடத்தில் மேல் | தாமதமின்றி பொருத்தமான நடவடிக்கை | கடைகளுக்காக மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு |

| | | |
|---|---|---|
| மாடியில் ரூபா 5,949,957 செலவினத்தில் 2015 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட 12 கடைகள் பயனற்று மூடி வைக்கப்பட்டிருந்தன. | எடுக்க வேண்டும். | கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அதற்காக பதில் கிடைத்திருக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் தொலைபேசி மூலமும் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு உரிய மதிப்பீட்டை துரிதமாக பூர்த்தி செய்து அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது. |

(ஆ) சீதாகம முன்பள்ளி பாடசாலை

| | | |
|---|---|---|
| சீதாகம முன்பள்ளி பாடசாலைக்கு முன்னால் உள்ள பொது வசதிகளுக்கான காணி மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவில்லை. | நலன்புரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | இதில் சிறுவர், முதியோர் நாளாந்தம் உடற்பயிற்சி செய்வதற்கு தேவையான வியாபார உபகரணங்கள் மற்றும் நடக்கும் நிரையும் அமைப்பதற்கு கருத்து தெரிவிக்கப்பட்டதுடன் அதற்காக போதியளவான நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டு நவீனப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. |

(இ) கொடகொடவத்த சனசமூக மண்டப நிர்மாணம்

| | | |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,769,175 தொகையான செலவினத்தில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலைய கட்டிடத்தில் இருந்து எதிர்பார்த்த பயன்பாடு பெற்றுக்கொள்ளப்படாதிருந்துடன் கட்டிடத்தின் வளவுக்குள் காடு வளர்ந்து அழுக்கடைந்து காணப்பட்டது. | தாமதமின்றி பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மக்களுக்கு அதன் பொறுப்பைக் கையளித்து வருடாந்தம் செயலமர்வுகளை நடாத்துவதற்கும் சிரமதான பணிகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சீதவகபுற நகர சபை பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள காணியில் உள்ள முன்பள்ளி பாடசாலைக்கு பின்பக்கத்தில் 15 அடி உயரம் அளவிலான | தாமதமின்றி பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்பள்ளி பாடசாலைக்கு பின்பக்கத்தில் 15 அடி அளவிலான மண் குவியலொன்று காணப்பட்டதுடன் அதன் |

| | | |
|---|---|---|
| ஆபத்துடன்கூடிய, மீளமைப்புச் செய்யவேண்டிய கட்டொன்று காணப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தது. | | பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்ட பக்கச்சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டின் போது மாகாண சபை அமைச்சில் இருந்து எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 3.4.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைக்குரிய 08 வாகனங்கள் சபையின் வாகன தரிப்பிடத்தில் பயனற்று துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 03 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை தற்போது அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக அவிசாவெல டிப்போவின் இயந்திர பொறியியலாளரின் தொழிநுட்ப அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. மாகாண நிதி சுற்றறிக்கை 09/2015 இன் பிரகாரம் அகற்றுதல் குழு நியமிக்கப்பட்டு மிகுதி வேலை நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 51 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,043,500 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 20 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,952,395 தொகையில் 50 சதவீதத்தை விட குறைவாக செலவிடப்பட்டிருந்தது. | பாதீட்டை ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்த வேண்டும். | செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த பணிகளை மேற்கொள்வதற்கு அத்தியவசியமான மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அளவில் செலவிடப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |